## திராவிட இயக்கம் போல, இஸ்லாமிய நெறி போல

# இசை முரசு நாகூர் ஹனிபா குரலும் பணிகளும் எப்போதும் நம்முடன் வாழ்ந்துகொண்டே இருக்கும்!

## நாகையில் நடைபெற்ற நாகூர் ஹனிபா நூற்றாண்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேருரை!

நாகை, டிச. 24-

**நாகப்பட்டினத்தில் இசை முரசு நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு விழா பேருரையாற்றினார்.**

**அப்போது அவர், ``திராவிட இயக்கம் போல, இஸ்லாமிய நெறி போல, நாகூர் ஹனிபா அவரின் குரலும் பணிகளும் எப்போதும் நம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கும்” என்று அவர் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

`இசை முரசு’ நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் கலந்துகொண்டதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சி, நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள டாக்டர் ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தில் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பெயரையும் நம் முதலமைச்சர் அவர்கள்தான் சட்டப் போராட்டத்தை நடத்திப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார் என்பது நமக்குக் கூடுதல் பெருமையாகும்.



### சொந்த வீட்டுக்கு வரும் உணர்வு

இந்த நாகப்பட்டினத்திற்குப் பலமுறை வந்திருக்கிறேன். எத்தனையோ மாவட்டங்களுக்குச் சென்றாலும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வரும்போது மட்டும், எனது சொந்த மாவட்டம் என்பதால், சொந்த வீட்டிற்கு வரும் உணர்வும் மகிழ்ச்சியும் எனக்கு ஏற்படும். சொந்த வீட்டுக்கு வந்து எனது அக்கா, தங்கை மற்றும் உறவினர்களைப் பார்ப்பது போன்ற உணர்வு உங்களையெல்லாம் இந்த நிகழ்ச்சியில் சந்திக்கும்போது எனக்கு ஏற்படுகிறது.

இந்த நாகை மாவட்டம் இந்தியாவுக்கே ஒரு முன்மாதிரியான மற்றும் வழிகாட்டக்கூடிய மாவட்டமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஏனெனில், இங்குதான் சிக்கல் சிங்காரவேலரின் கோயிலும் வேளாங்கண்ணி தேவாலயமும் நாகூர் தர்காவும் அமைந்துள்ளன. சாதி, மதம் பாராமல் அனைவரும் ஒற்றுமையாக வாழக்கூடிய மண் இந்த நாகை மண்.

### ஹஜ் இல்லம்

மூன்று நாட்களுக்கு முன்பு, முதலமைச்சர் அவர்கள் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியப் பெருமக்கள் தங்குவதற்காக சென்னையில் ஹஜ் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்துகொண்டார்கள். நானும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றேன். இன்று, நாகப்பட்டினத்தில் இசை முரசு நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டுள்ளேன். வருகின்ற 24ஆம் தேதி, சென்னையிலும் கழகத்தின் சார்பாக நடைபெற உள்ள இசை முரசு நூற்றாண்டு விழாவில் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

### பேரறிஞரின் நம்பிக்கை

இசை முரசு அவர்களின் நூற்றாண்டு விழாவை, நாம் இவ்வளவு சிறப்பாகவும் நெகிழ்வோடும் கொண்டாடுகிறோம் என்றால், ஹனிபா ஐயா அவர்கள் தமக்கு ஒரே இறைவன், ஒரே தலைவர், ஒரே இயக்கம் என கடைசிவரை வாழ்ந்த பெருமைக்குரியவர் என்பதே காரணமாகும். 1957ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் தனது முதல் தேர்தலைச் சந்தித்தபோது, பேரறிஞர் அண்ணாவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாகப்பட்டினம் தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் நாகூர் ஹனிபா அவர்கள்தான். இளம் வயதிலேயே அண்ணாவின் நம்பிக்கையைப் பெற்றவர் அவர் என்பதைத் தெரிவிப்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

### தனித்துவம் வாய்ந்த குரல்கள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இசை முரசு ஹனிபா அவர்களுக்கும் இடையில் இரண்டு வயது வித்தியாசம் மட்டுமே இருந்தது. இருவரும் சம வயதினர். தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் இரண்டு குரல்கள் மட்டும் எப்போதும் தனித்துவமாகத் தெரியும். ஒன்று, முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சுக்குரல், இரண்டாவது, இசை முரசு நாகூர் ஹனிபாவின் பாட்டுக் குரல். இவை இரண்டுமே கழகத்தின் கொள்கைக் குரல்களாக ஒலித்தன.

இந்த இரண்டு குரல்களையும் தமிழ்நாட்டிற்குத் தந்த பெருமை நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு உண்டு. இந்த இரண்டு குரல்கள்தான் தொடர்ந்து 75 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் மேடைகளில் ஒலித்த பெருமைக்குரிய குரல்கள்.

கடந்த ஆண்டு, கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு, நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். நம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் வேளையில், இத்தகைய விழாக்கள் நடைபெறுவது, வரலாறு நமக்குத் தந்த வாய்ப்பு.

தந்தை பெரியாரின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா, இனமானப் பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டு விழா எனப் பல விழாக்களையும் நமது அரசு முன்னெடுத்து, சிறப்பாகச் செய்துவருகிறது. மேலும், தமிழ்நாட்டிற்காக உழைத்த அனைத்து திராவிடத் தலைவர்களுக்கும் நூற்றாண்டு விழா எடுக்கும் வகையில், மீண்டும் திராவிட மாடல் அரசே அமையும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

### பேச்சுக்குரலும் பாட்டுக்குரலும்

இசை முரசு அவர்கள் எவ்வாறு திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார் என்பதை இன்றைய இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இசைமுரசு அவர்களின் தந்தை முகமது இஸ்மாயில் அவர்கள், மலேசியாவின் கோலாலம்பூரில் இரயில்வேயில் பணியாற்றி வந்தார்.

1935ஆம் ஆண்டு, ஐயா ஹனிபா அவர்களுக்கு 15 வயதாக இருந்தபோது, தனது அப்பா தமிழ்நாட்டில் நடப்பதைத் தெரிந்துகொள்வதற்காகத் தினசரிப் பத்திரிகைகளைச் சேகரித்து, நாகையிலிருந்து மலேசியா செல்லும் கப்பல் வழியாகத் தனது தந்தைக்கு அனுப்பிவைப்பார். அவ்வாறு அனுப்பும் முன்பே அப்பத்திரிகைகளை அவரும் படிக்கத் தொடங்கினார். அவ்வாறுதான் தந்தை பெரியாரின் `குடிஅரசு’ இதழை அவர் படிக்க நேர்ந்தது.

இந்த நேரத்தில், ஒரு வரலாற்று ஒற்றுமையைக் குறிப்பிட விரும்புகிறேன். நாகூரில் இருந்த சிறுவன், எப்படி `குடிஅரசு’ பத்திரிகையைப் படித்தாரோ, அதேபோல் திருக்குவளையில் சிறுவனாக இருந்த கலைஞரும் அதே காலகட்டத்தில் ‘குடிஅரசு’ இதழைப் படித்தார் என்பது ஒரு வரலாற்று ஒற்றுமையாகும். சுயமரியாதைக் கருத்துகளை உள்வாங்கி, கலைஞரின் பேச்சுக்குரலும் ஐயாவின் பாட்டுக்குரலும் உருவாயின.

அந்த சமயத்தில், இந்தித் திணிப்பை எதிர்த்து, தந்தை பெரியார் அறிவித்த முதல் மொழிப் போர்தான் இவர்களைப் போராட்டக் களத்துக்கு அழைத்து வந்தது. 14 வயதில் திருவாரூர் வீதியில் கலைஞர் அவர்கள் போராட்டத்தில் இறங்கிய போது, அவரைவிட இரண்டு வயது இளையவரான இசை முரசு அவர்கள் நாகூர் வீதியில் இந்தியை எதிர்த்து ஊர்வலம் சென்றார். இந்த வரலாற்றை இன்று இருக்கின்ற இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

### இந்தித் திணிப்பு

அன்றைக்கு பெரியார் மற்றும் அண்ணா தலைமையில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் தமிழ்நாடு வென்றது. இன்று, அதே இந்தித் திணிப்பு வேறு வடிவில் ‘மும்மொழிக் கொள்கை’ என்ற பெயரில் நுழையப்பார்க்கிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய வரிப்பணம் 2,000 கோடி ரூபாயைத் தருவோம் என்று ஒன்றிய அமைச்சர் சொல்கிறார். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ``நீங்கள் 2,000 கோடி இல்லை, 10,000 கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டிற்குள் இந்தித் திணிப்பை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்” என்று தைரியமாகச் சொல்கிறார்.

தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் தமிழ் மொழிக்காக நடந்த போராட்டங்களை அவர் அறிந்திருப்பதால்தான், தமிழ்நாட்டில் எப்போதும் இருமொழிக் கொள்கைதான் இருக்கும் என்பதில் நம் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மீண்டும் சொல்கிறேன், நாகூர் ஹனிபா அவர்களின் காலடிச் சுவடுகள் இந்த மண்ணில் இருக்கும் வரை, அவரின் குரல் காற்றில் கலந்திருக்கும்வரை, தமிழ்நாடு ஒருபோதும் இந்தித் திணிப்பை அனுமதிக்காது. அய்யா ஹனிபா அவர்கள் பாடிய திராவிட இயக்கப் பாடல்களும் இஸ்லாமியப் பாடல்களும் என்றும் நம் காதுகளில் ஒலிக்கும். அவர் பாடிய பின்னரே திராவிட இயக்க மாநாடுகள் தொடங்கும்.

இன்று, திரைப்படக் கதாநாயகர்களுக்குப் பின்னணி இசை (BGM) மற்றும் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் மூலம் `பில்டப்’ கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்தக் காலத்திலேயே எந்த விதத் தொழில்நுட்ப உதவியும் இன்றி, தனது குரல்வளத்தால் மட்டுமே இளைஞர்களிடம் எழுச்சியை ஊட்டியவர்தான் அய்யா ஹனிபா அவர்கள்.

இசை முரசு ஹனிபாவைப் பற்றி கலைஞரே பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். கலைஞரின் வார்த்தைகள், “அரசியலில் நான் அடியெடுத்து வைத்த சிறுவயது முதல், நாகூர் ஹனிபாவை எனக்குத் தெரியும். அன்று கேட்ட அதே குரல், வளமிக்க குரல், அனைவரையும் வளைக்கும் குரல், ஆதிக்கக்காரர்களின் செவிப்பறைகளைக் கிழிக்கும் இடியோசைக் குரல்” என்று கலைஞர் அவர்கள் பெருமையோடு சொல்லியிருக்கிறார்.

### பேசும் புகைப்படம்

ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு, `A picture is worth more than a thousand words’ என்று சொல்வார்கள். `ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு மேல் சமம்’ என்று சொல்வார்கள். அதேபோன்று, இங்கே அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியில், இசைமுரசு நாகூர் ஹனிபா அவர்களின் புகைப்படம் இடம்பெற்றுள்ளது. அதை வரும்போது பார்த்துவிட்டு வந்தேன். அங்கே, ஐயா அவர்களும் அவரின் வலது பக்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இடது பக்கத்தில் இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களும் இருப்பார்கள். இரண்டு பேர் தோள்களிலும் ஐயா அவர்கள் தன்னுடைய கைகளைப் போட்டு அணைத்துக்கொண்டிருப்பார். 2002ஆம் ஆண்டில், வாணியம்பாடி இடைத்தேர்தலில் ஐயா அவர்களை வேட்பாளராக, கலைஞர் அவர்கள் அறிவித்தபோது எடுக்கப்பட்ட ஒரு சிறப்பான, நெகிழ்வான படம் அது.

அந்த ஒரு படமே போதும், கலைஞர் அவர்களிடத்திலும் பேராசிரியர் அவர்களிடத்திலும் ஹனிபா அவர்கள் எந்த அளவுக்கு உரிமையோடு பழகினார் என்பதற்கு அந்தப் புகைப்படம் ஒரு சாட்சி. ஐயா அவர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினராக, வக்ஃபு வாரியத்தின் தலைவராக இருந்து நாட்டு மக்களுக்கும் இஸ்லாமியப் பெருமக்களுக்கும் சிறப்பாகத் தொண்டாற்றினார்.

### கலைஞர் தந்த சிறப்புகள்

அவருக்கு கலைஞர் அவர்கள்தான் கலைமாமணி விருதைக் கொடுத்து சிறப்பித்தார். 2015 ஆம் ஆண்டு ஐயா அவர்கள் மறைந்தபொழுது, கலைஞர் அவர்களால் அந்தத் துக்கத்தை அடக்க முடியவில்லை. சென்னையில் இருக்கக்கூடிய அவருடைய வீட்டுக்குச் சென்று தன் இறுதி அஞ்சலியைச் செலுத்தி, கண்ணீர்விட்டு அழுதார் கலைஞர் அவர்கள்.

பிறகு, இந்த நாகப்பட்டினத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், நம் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு அய்யாவின் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். மேலும், நம் முதலமைச்சர் அவர்கள் நாகூர் தைக்கால் தெருவுக்கு இசைமுரசு நாகூர் ஹனிபா தெரு என்று பெயரிட்டார்கள். அதேபோல நாகூர் சில்லடி கடற்கரைச் சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுப் பூங்காவுக்கு, அய்யாவின் பெயரில் நூற்றாண்டு நினைவுப் பூங்கா என்றும் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் அதை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்துவிட்டுத்தான் இன்று இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோம்.

### மத நல்லிணக்கம் காக்கும் அரசு!

இங்கே இருக்கக்கூடிய நாகை சட்டமன்ற உறுப்பினர், சகோதரர் ஆளூர் ஷாநவாஸ் அவர்கள் ஒருமுறை, மறைந்த மதுரை ஆதீனம் அவர்களைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். இதனைப் பல பேர் சமூக ஊடகங்களில் (Social Media) பார்த்திருப்பீர்கள். அப்பொழுது மதுரை ஆதீனம் அவர்கள், நம் ஷா நவாஸிடம் நாகூர் ஹனிபா அவரின் பாடல்களை மிக அழகாகப் பாடிக்காட்டுவார். இப்படி மத நல்லிணக்கத்தைப் பேசுகின்ற குரல், மதங்களைக் கடந்து அனைவராலும் நேசிக்கப்படும் ஒரு குரல்தான் நம் அய்யாவின் குரல்.

எனவே, இந்த மண்ணில் திராவிட இயக்கம், இஸ்லாமிய நெறி உள்ளவரைக்கும் இசைமுரசு நாகூர் ஹனிபாவின் குரல் எப்பொழுதுமே நிச்சயம் ஒலித்துக்கொண்டேதான் இருக்கும். நாகூர் ஹனிபா எப்படி மத நல்லிணக்கத்துக்கு உதாரணமாகத் திகழ்கிறாரோ, அதேபோல தமிழ்நாட்டையும் நாம் என்றைக்கும் மத நல்லிணக்க மாநிலமாக வைத்திருக்க வேண்டும்.

மத நல்லிணக்கத்தைக் காக்கின்ற அரணாக நம் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்பொழுதெல்லாம் அமைகிறதோ, அப்பொழுதெல்லாம் இஸ்லாமிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவருகிறார்.

### நலத்திட்டமும் பாதுகாப்பும்

மீலாது நபிக்கு விடுமுறை உறுதிசெய்தது, உருது பேசக்கூடிய முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது, சிறுபான்மையினர் நல ஆணையம் அமைத்தது, ஓய்வூதியம் பெறுகின்ற உலமாக்களுடைய எண்ணிக்கையை 2,000லிருந்து 2,400 ஆக உயர்த்தியது, வக்ஃபு வாரியச் சொத்துகளைப் பாதுகாத்துப் பராமரிக்க 40 லட்சம் ரூபாயை மானியமாக ஒதுக்கியது, உருது அகாடமி தொடங்கியது, கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தது, பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகித இடஒதுக்கீட்டை அளித்தது, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை 20,000 ரூபாயாக இருந்ததை இன்றைக்கு 30,000ஆக உயர்த்திக் கொடுத்தது,

நலவாரிய உறுப்பினர்களுடைய குழந்தைகளுக்கு, 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குவது, சென்னை மற்றும் கோவை மாவட்டங்களில் இரண்டு சிறுபான்மையினர் கல்லூரி மாணவ விடுதிகள் அமைத்துக் கொடுத்தது, சென்னை ராயப்பேட்டையில் உள்ள சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக்கு 6 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் அமைத்துக் கொடுத்தது, அரசு சார்பாக நாகூர் சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ அளவில் சந்தனக்கட்டைகள் வழங்கியது என, இப்படி இஸ்லாமியர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதுபோன்ற திட்டங்கள் தொடர, இஸ்லாமிய மக்கள் தொடர்ந்து உங்களுடைய ஆதரவை நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் திராவிட மாடல் அரசுக்கு நீங்கள் எப்பொழுதும் போல் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

திராவிட இயக்கம் போல, இஸ்லாமிய நெறி போல, நாகூர் அனிபா அவரின் குரலும் பணிகளும் எப்போதும் நம்முடன் வாழ்ந்துகொண்டே இருக்கும் என்று சொல்லி, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைக் கூறி, அய்யா நாகூர் ஹனிபாவின் புகழ் என்றென்றும் ஓங்கி நிற்கட்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழா பேருரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மு.பெ.சாமிநாதன், சட்ட மன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், அவைத் தலைவர் ப.செல்வம், நகர கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, திருமருகல் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் செல்வ.செங்குட்டுவன், நாகை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என்.ஆனந்த், தாட்கோ தலைவரும் தி.மு.க. இளைஞர் அணித் துணைச் செயலாளருமான நா.இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் பவனந்தி, நாகூர் ஹனிபா அவர்களின் மகன்கள் நௌஷத் அலி, நாசர் அலி, மகள்கள் அஜ்மா பேகம், நூர்ஜஹான் பேகம், ஜரீனா பேகம், தமிழ்நாடு அரசு மீனவர் நல வாரிய உறுப்பினர் அக்கரைப்பேட்டை மனோகர், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், புலவர் சண்முகவடிவேல் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---


## மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

*திருச்சி, டிச. 24 -*

*திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



*திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மகாத்மா காந்தி தேசிய உறுதியளிப்பு சட்டத்தை சிதைத்து அதன் திட்ட பணிகளை சீர் குலைத்து நிதி ஒதுக்கீட்டை குறைப்பது மாநிலங்களில் நிதிச் சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவதாகும். வேலை நாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, நமது நாட்டின் முதுகெலும்பு என்று சொன்ன அண்ணல் காந்தியடிகளின் பெயரை இத்திட்டத்தில் இருந்து நீக்குவது, 100 நாள் வேலையை இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்க துடிக்கும் “ஒன்றிய பா.ஜ.க அரசின் சதி செயலுக்கு ஆதரவாக செயல்படும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, அச்சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் இன்று (24.12.2025 புதன் கிழமை) காலை 10 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கின்றது.*

*1. திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் குண்டூர் ஊராட்சி, 2. திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் வாழவந்தான்கோட்டை ஊராட்சி,*

*3. மணப்பாறை ஒன்றியம் பன்னாங்கொம்பு ஊராட்சி, 4. மருங்காபுரி வடக்கு ஒன்றியம் வேம்பனூர் ஊராட்சி, 5.மருங்காபுரி தெற்கு ஒன்றியம் செவல்பட்டி ஊராட்சி, 6.மருங்காபுரி மத்திய ஒன்றியம் கவுண்டம்பட்டி ஊராட்சி, 7.வையம்பட்டி வடக்கு ஒன்றியம் வி.பெரியபட்டி பூலாம்பட்டி ஊராட்சி, 8. வையம்பட்டி தெற்கு ஒன்றியம் ஏலமணம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் நடைபெறுகிறது.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுகின்றோம்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, வருகின்ற டிசம்பர் 29 அன்று, பல்லடத்தில் நடைபெறவிருக்கும், ‘வெல்லும் தமிழ்ப்பெண்கள்’ கழக மேற்கு மண்டல மகளிர் மாநாடு குறித்தான, கரூர் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.